# திருவருகைக்காலத்தின் நான்காம் ஞாயிறு

# திருவழிபாடு ஆண்டு 3

# 2024-12-22

(*இன்றைய வாசகங்கள்:*

*இறைவாக்கினர் மீக்கா நூலிலிருந்து வாசகம்* 5: 2-5 ,

*திருப்பாடல்* 80: 1-2. 14-15. 17-18,

*எபிரேயருக்கு எழுதப்பட்ட திருமுகத்திலிருந்து வாசகம்* 10: 5-10,

*லூக்கா எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம்* 1: 39-45)

*திருப்பலி முன்னுரை*

*கடவுளுக்குரியவர்களே, திருவருகைக்காலத்தின் நான்காம் ஞாயிறு திருப்பலிக்கு உங்கள் அனைவரையும் மகிழ்ச்சியுடன் வரவேற்கிறோம். கிறிஸ்து பிறப்பு விழாவுக்கான இறுதிகட்ட தயாரிப்புக்கு இன்றைய திருவழிபாடு நம்மை அழைக்கிறது. கடவுளின் பெயரால் இஸ்ரயேலை ஆட்சி செய்யும் மீட்பரின் வருகையை எதிர்நோக்க இன்றைய வாசகங்கள் நமக்கு அழைப்பு விடுக்கின்றன. இயேசுவை வயிற்றில் சுமந்தவராய் சென்ற கன்னி மரியாவை சந்தித்த எலிசபெத்தும், யோவானும் அடைந்த மகிழ்ச்சியை அனுபவிக்க நாம் அழைக்கப்படுகிறோம். வரவிருக்கும் நம் ஆண்டவரும் அமைதியின் அரசருமான இயேசுவை நம் உள்ளத்திலும் இல்லத்திலும் வரவேற்க தயாராவோம். நிகழவிருக்கும் கிறிஸ்து பிறப்பு நம்மை மகிழ்ச்சியால் நிரப்ப வேண்டுமென்று, இந்த திருப்பலியில் மன்றாடுவோம்.*

## *விசுவாசிகள் மன்றாட்டுகள்:*

*விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.*

*பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.*

*மீட்பின் ஒளியாம் இறைவா!*

*எங்கள் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவரும் உமது வருகையை எல்லோருக்கும் பறைசாற்ற அவர்களை ஆயத்தப்படுத்த வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*மீட்பின் ஒளியாம் இறைவா!*

*வியாதி, வறுமை, வருத்தம் போன்றவையால் துன்பப்படுவோர் அனைவரும் உமது வருகையால் அவற்றிலிருந்து விடுதலைப் பெற வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*மீட்பின் ஒளியாம் இறைவா!*

*எம் இளைஞர்கள், இளம்பெண்கள், சிறார்கள் உமது பிறப்பு விழாவைத் தூய உள்ளத்துடனும், மன மகிழ்வுடனும் கொண்டாட அருள்புரிய வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*மீட்பின் ஒளியாம் இறைவா!*

*உமது வருகையை நினைவு கூரும் நாங்கள் அனைவரும் உமது விண்ணக வருகைக்காக எம்மைத் தயாரிக்க அருள்புரிய வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*மீட்பின் ஒளியாம் இறைவா!*

*மரியாவைப் போன்று நாங்களும் அடுத்தவர் தேவைகளை அறிந்து, உள்ளார்ந்த அன்போடு உதவிக்கரம் நீட்ட வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

மாட்சியின் மன்னராம் இறைவா,

எம் நாட்டு அரசியல் மற்றும் சமூகத் தலைவர்கள், மக்களை நேரிய வழியில் நடத்த வும், மக்களிடையே தோன்றும் பிரிவினைகளை ஊக்குவிக்காமல் ஒற்றுமையை உருவாக்கவும் தேவையான ஞானத்தை வழங்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

நலம் நல்குபவராம் இறைவா,

மனம் மற்றும் உடல்நலக் குறைபாடுகளால் துன்புறுவோரும், வறுமை, கடன் சுமை உள்ளிட்ட உலகு சார்ந்த பிரச்சனைகளால் பாதிக்கப்பட்டுள்ளோரும் வேதனை நீங்கி புது வாழ்வு காண அருள்புரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.